2024 ஜூன் 29]

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இதையெல்லாம் நீங்கள் பேசினால், எல்லாமே அவைக் குறிப்பில் ஏறாது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் நீங்கள் பேசுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: ****

(ஆ) நெல்லுக்கான ஊக்கத்தொகை ஜூலை முதல் உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா பகுதியில் மிகக் கடுமையான சவால்களுக்கு மத்தியில் கோடைக்காலத்தில் பயிர்களை பயிர் செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெல்லுக்கான ஊக்கத்தொகை 1–9–2024 முதல் அமல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை 1–7–2024 முதல் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.*

(இ) பண்ருட்டி தொகுதி, கலை, அறிவியல் கல்லூரி மற்றும் வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தளபதி அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று, நான்காண்டுகளுக்கான நிதிநிலை*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அறிக்கையை நாம் நிறைவு செய்கிறோம். இந்தச் சூழலில், இந்த நான்காண்டுகளிலும் என்னுடைய தொகுதி மேம்பாட்டுக்கென்று, என்னுடைய தொகுதி வளர்ச்சிக்கென்று கலை, அறிவியல் கல்லூரி மற்றும் வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: கவன ஈர்ப்புதான் கொடுத்திருந்தேன். அதாவது, கலை, அறிவியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைகள் வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிப்பதற்காகத் தந்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் நேற்று சந்தித்தேன். இந்த நான்காண்டுகளில் என்னுடைய தொகுதிக்கான சிறப்புத் திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. அதனால், மாண்புமிகு மூத்த அமைச்சர்களுக்கு அறிவுறுத்தி, கலைக் கல்லூரி அல்லது வேளாண்மைக் கல்லூரியை நடப்பாண்டிலேயே என் தொகுதியில் தொடங்குவதற்கு இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

(ஈ) பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் கிரிவலப் பாதை ஆக்கிரமிப்புகள் அகற்றம், பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் கிரிவலப் பாதையில் ஆக்கிரமிப்புகளை அகற்ற மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளால், பல தலைமுறைகளாக அண்ணாசெட்டி மடம் எனும் பகுதியில் வாழும் 120-க்கும் மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள், அதேபோல, பட்டாதாரர் நிலங்களிலுள்ள வியாபாரிகள், சந்நிதி வீதி வியாபாரிகள், சாலையோர வியாபாரிகள் மற்றும் அப்பகுதியில் விளைநிலங்களுக்கு, வேளாண் பணிகளுக்குச் செல்லும் உரிமையை பல தலைமுறைகளாகப் பெற்றுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், அந்தப் பகுதிகளில் குடியிருந்து வரும் குடியிருப்புகளில் வாழும் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் வாழ்வுரிமையை